**DEPOSITION OF WITNESS**

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, PERAMBALUR.**

| | | | |
|---|---|---|---|
| Calender | : | Miscellaneous | : |
| Preliminary Register | : | Case No. | : **S.C.19/2022** |
| Sessions | : | | |

| | | | |
|---|---|---|---|
| Deposition of witness for : | Prosecution | : | **P.W. 11** |
| | Defence | : | **D.W.** |
| | Court | : | **C.W.** |

| | | | |
|---|---|---|---|
| **Name :** | வேல்முருகன் | **S/o.(or)W/o. :** | |
| Village : | | Taluk : | |
| Calling : | | Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of **17.10.2025**

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் பெரியம்மாபாளையத்தில் குடியிருக்கிறேன். விவசாயம் செய்கிறேன். ஆஜர் எதிரியை தெரியும். வழக்கில் இறந்துபோன கருப்பயைாவை தெரியும். சுமார் 5, 6 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் இரவில் கருப்பயைா இறந்ததாக சொன்னார்கள். யாரோ கொலைசெய்துவிட்டதாக சொன்னார்கள். யார் என்று தெரியாது. போலிசார் விசாரிக்கவில்லை.

**இந்நிலையில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பு அனுமதி கோரியதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டது.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

நான் பெரியம்மாபாளையத்தில் கரம்பியம் ரோட்டில் குடியிருக்கிறேன் என்றால் இல்லை மெயின்ரோட்டில் குடியிருக்கிறேன். கரம்பியம் ரோட்டில் உள்ள காட்டில் எதிரி குடும்பத்தினர் குடியிருக்கிறார்கள். எதிரிக்கும், கருப்பயைாவுக்கும் இடையே காடு விற்பது சம்மந்தமாக அடிக்கடி சண்டை போட்டுக்கொண்டார்கள் என்றும், அது சம்மந்தமாக நானும், ஊர்காரர்களும்

பஞ்சாயத்து செய்தோம் என்றால் போலிசார்விசாரணையில் சொன்னேன் என்றால் சரியல்ல. அவ்வாறு பஞ்சாயத்து பேசும்போது எதிரி அவர் தகப்பனார் மற்றும் சித்தப்பாவை பார்த்து நீயும் உன் தம்பியும் பிழைக்க விட மாட்டிங்க, நீங்க இரண்டுபேரும் செத்தால் தான் எனக்கு வாழவழிகிடைக்கும். அதையும் நான் நடத்தி காட்டுவேன் என்று எதிரி சொன்னதாக போலிசார் விசாரணையில் சொன்னேன் என்றால் சரியல்ல. 22.01.2021ம் தேதி இரவு சுமார் 11.30 மணிக்கு எதிரிக்கும் கருப்பயைாவுக்கும் சண்டை நடந்தது என்றும் எதிரி கத்தியால் குத்தியதாகவும், கருப்பயைாவின் தம்பி அதை தடுக்க போனதாகவும், அப்போது கத்தியால் அவரையும் எதிரி அவர் தகப்பனாரை கத்தியால் குத்தி கொலைசெய்ததாக கேள்விபட்டதாக போலிசார் விசாரணையில் சொன்னேன் என்றால்சரியல்ல. தற்போது எதிரி என்ஊர்காரர்கள் என்பதால் மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை.

**மறுவிசாரணை**: இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.